**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE SPECIAL SUB JUDGE FOR MCOP CASES, MADURAI.**
**MCOP No.821 /2017**

**Deposition of Witness for the Petitioner PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜான் பிரிட்டோ | Caste | : |
| Father / Husband Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of 11/2023

**முதல் விசாரணை**

நான் அசல் மனுவில் மனுதாரர். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். படித்து பார்த்தேன் சொன்னபடி சரியாக உள்ளது. எனது முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 மாதிரி வரைபடம் ம.சா.ஆ.2 புகார்மனு ம.சா.ஆ.3 காயச்சான்றிதழ் ம.சா.ஆ.4 டிஸ்சார்ஜ் சம்மரி ம.சா.ஆ.5 ரூ.94,952/–க்கான மருத்துவபில்கள் ம.சா.ஆ.6 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ம.சா.ஆ 7 எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் ம.சா.ஆ.8 வங்கி பாஸ்புக் நகல் ம.சா.ஆ.9 எனது ஒட்டுநர் உரிமம் ம.சா.ஆ.10 ஆகவும் ஊனச்சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மனுவில் கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

## 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கு.வி

விபத்து சமயத்தில் நான் ஓட்டிச்சென்ற கார் செல்வராணி என்பருக்கு பாத்தியப்பட்டது அவர் எனது நண்பர். நான் விபத்திற்கு முன்பு செல்வராணியிடம் இருந்து காரை இரவல் வாங்கி சென்றேன். விபத்து சமயத்தல் நான் தான் காரை ஓட்டிச்சென்றேன். நானும் என் குடும்ப உறுப்பிநர்கள் 8 நபர்களும் சேர்ந்து கோவிலுக்கு சென்றபோது விபத்து நடந்தது என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக என் தாத்தா கொடுத்த புகாரின் பேரில் என் மீது தான் மு.த.அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். என்மீது தாக்கல் செய்யப்ப்ட்ட மு.த.அறிக்கையின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு விளாத்திகுளம் நடுவர் நீதிமன்றத்தில் 11.11.2017 அன்று STCN 542/2017 ன் கீழ் ரூ.3500 பணம் செலுத்தினேன் என்று சொன்னால் ஞாபகம் இல்லை. காரில் பயணம் செய்த மற்ற என் குடும் உறுப்பினர்கள் என்னுடைய கவனக்குறைவால் தான் விபத்து நடந்தது என்று இழப்பீடு மனு தாக்கல் செய்து காப்பீட்டு நிறுவனத்திடம் இருந்து சமரச மையத்தின் மூலமாக சமரசம் பேசப்பட்டு அதன் பேரில் இழப்பீட்டுத்தொகையை இதே நீதிமன்றத்தில் மூலமாக பெற்றுவிட்டார்கள் என்று சொன்னால் சரிதான். நான் அசல் மனுவை மோட்டார் வாகன சட்டம் பிரிவு 140, 160 ல் தாக்கல் செய்து தற்போது பிரிவு 163A ல் இழப்பீடு கேட்டுள்ளேன் என்ற சொன்னால் சரிதான். நான் 1ம் எதிர் மனுதாரர் மீது 1ம் எதிர் மனுதாரர் அனுமதியுடன் தான் காரை பெற்று ஓட்டிச்சென்றேன் என்றால் சரிதான். காப்பீடு 3ம் எதிர் மனுதாரர் பேரில் இருந்தது என்றால் சரிதான். விபத்திற்க நான் தான் காரணம்

**என்பதாலும் நான் உரிமையாளர் ஓட்டுநர் இல்லை என்பதாலும் 1ம் எதிர் மனுதாரரிடம் இருந்து நான் இரவல் வாங்கி காரை ஓட்டிச்சென்று விபத்து ஏற்படுத்தியதால் காப்பீட்டு நிபந்தனை படி இந்த நீதிமன்றத்திற்கு இழப்பீடு வழங்க அதிகாரம் இல்லை என்ற சொன்னால் சரியல்ல. என்னுடைய மனு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.**

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒத்துக்கொள்ளப்பட்டது.

சிறப்பு சார்பு நீதிபதி, மோ.வா.வி வழக்குகள்,
மதுரை.